சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**விடுமுறைக்கால செயலட்டை**

தயாரிப்பு – மாவனல்லைக் கல்வி வலயம்

**தரம் 5 – சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

**(நவம்பர் 1ஆம் வாரம்)**

## 15. கருப்பொருள்: எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்.

❖ **செயற்பாடு – 1**

நாம் இன்று ஒரு ஆக்கம் செய்வோம். உங்கள் பாடசாலைக் காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக வகுப்பறையிலிருந்து வெளியில் செல்வீர்கள் அல்லவா. அதற்கான அனுமதிப் பத்திரத்தைத் தயாரிப்போம்.

அதற்கு தடிப்பான காட்போட் அட்டையொன்று எடுங்கள். (அது 8cm X 5cm) வலுவான நூல், நிறம். துளைப்பான் என்பவற்றை எடுங்கள். விருப்பமான முறையில் அட்டையின் இரு பக்கங்களுக்கும் நிறந் தீட்டுங்கள். விரும்பிய அலங்காரம் வரையுங்கள். மத்தியில் ஒரு துளையிட்டு நூலைப் போடுங்கள். (அதனை வகுப்புக்கு எடுத்து வாருங்கள்.)

❖ **செயற்பாடு – 2**

உங்களுக்குத் தெரியுமா எமது மூதாதையோர் உபயோகித்த இப்போது அருகிப்போகும் பழைய நுட்ப முறைகள் பல உள்ளன. (எமக்கே உரித்தான சில வழிமுறைகள் உள்ளன) மூத்தோரிடம் கேட்டு ஒலைக் கிடுகு இழையுங்கள். சிறியதொரு தட்டு இழையுங்கள். இவற்றை இழைக்கும் வெவ்வேறு முறைகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். (ஓலையினால் செய்யக்கூடிய ஆக்கங்களைச் செய்யுங்கள்.









❖ **செயற்பாடு – 3**

ஒரு கிளையை எடுத்து வீட்டில் தந்தை அல்லது மூத்தோரிடம் கேட்டு வளைவொன்றை எவ்வாறு செய்யலாம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூத்தோரிடம் கேட்டுத் தெரிந்து எழுதுங்கள்.

1. பாரம்பரிய வழக்காறுகள்
2. நாட்டு வைத்தியம்
3. விவசாய நுட்பங்கள்
4. பாரம்பரிய கலைகள்